# "துவண்டு விழவிடாது தோள்கொடுப்போம்"

## விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

தென் தமிழீழத்தில் சிறிலங்கா இனவாத அரசின் சித்திரவதைகளுக்கும், முஸ்லிம் ஊர்காவல் படையினரின் கொடுமைகளுக்கும் இடையே சிக்கித் தவித்து நாளும் நாளும் துயருற்றுக்கொண்டிருக்கிறார்கள் எங்கள் சகோதரர்கள்? அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. மரணிக்கும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் சொந்த வீடுவாசலை மட்டும் இழக்கவில்லை. சொந்தஉறவுகளையும் தொலைத்து விட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். பாச உறவுகள் மரணித்து விட்டது கூடத் தெரியாமல், வருவார்கள் அவர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்எனவிடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் ''துவண்டுவிழ விடமாட்டோம் தோள் கொடுப்போம் உறுதியுடன்'' என்ற அறிக்கையில் தெரிவித்துள்ளனர்;

மேலும் அந்த அறிக்கையில், ஒவ்வொருதாயும் தம்பிள்ளை சிறிலங்கா இராணுவத்தினராலும். முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் குத்திக்குத

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

காலம் 01 மார்கழி (10-12-1990) திங்கட்கிழமை ஓசை 285

## வடபகுதி வான்வெளியில் விமானங்கள் பறக்கத் தடை

(கொழும்பு)

வட பகுதி வான்வெளியில் இனந்தெரியாத விமானங்கள் பறக்கின்றனவாம். கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரி இத்தகவலை அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளார். கட்டுநாயக்கா விமான நிலைய ராடர் இனந்தெரியாத விமானங்கள் யாழ்ப்பாண வான்வெளியில் பறப்பதைப் பதிவு செய்துள்ளது. கட்டுப்பாட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு கேந்திர நிலையில் பலமான பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பிலும், அதைச் சூழவுள்ள பிரதேசத்திலும் உள்ள கேந்திர முக்கிய பகுதிகள், பொருளாதார இலக்குகள், எரிபொருள் விநியோகப் பகுதிகள் என்பனவற்றின் பாதுகாப்பை சிறிலங்கா அரசாங்கம் பலப்படுத்தியுள்ளது. ஆயுதம் தாங்கிய படையினர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்புக்கு வடகிழக்காக 11 கி. மீ. தூரத்தில் களனியாவில் அமைந்துள்ள சபுகஸ்கந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தைச் சுற்றி என்றுமில்லாதவாறு பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரவும் பகலும் ஆயுதபாணிகளான இராணுவத்தினரும், பொலிஸ படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சாதாரண உடையில் புலனாய்வுத் துறையினரின் நடமாட்டமும் சுற்று வட்டாரத்தில் காணப்படுகின்றன. விடுதலைப்புலிகள் சபுகஸ்கந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தைத் தாக்கப் போவதாக அரசாங்கத்துக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்துள்ளதாம். அதனைத் தொடர்ந்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

கிரிபத்கொட - சபுகஸ்கந்த வீதியில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் கடுமையாகச் சோதனையிடப்படுகின்றன. கொழும்பின் நுழைவாயிலான களனிப் பாலத்திலும் பாதுகாப்புப் படையினர் வாகனங்களை (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒய்வுபெற விண்ணப்பித்தோர் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்விக்கோட்டத்தின் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பித்த சகல அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் எதிர்வரும் புதன்கிழமை ஒன்பது மணிக்கு யாழ். மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் தவறாது தம்மைச் சந்திக்கும்படி கோட்டக்கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் கேட்டுள்ளார்.

## துயர் துடைக்கும் பத்து நாட்கள்

தென் தமிழீழ மக்களின் துயர் துடைக்கும் வகையில் செயற்படக் கோரும் பத்து நாட்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

## மதியின்நினைவுநாள்

முன்னாள்யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் மதி (பாலச்சந்திரன் மல்லாகம்) யின் இரண்டாவது நினைவு நாள் இன்று தெல்லிப்பளையில் நடைபெறவுள்ளது. (ச)

## டில்லியில்மனிதஉரிமைகள்; 10ஆவது உலக மாநாடு

(டில்லி)

மனித உரிமைகள் பற்றிய உலக மாநாடு புதுடில்லியில் இன்று (பத்தாம்திகதி) ஆரம்பமாகவுள்ளது. மனிதஉரிமைகள் தினத்தைவொட்டி இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

ஐம்பது நாடுகளில் இருந்து 500 பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டை டில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம்;ஐ நா மன்ற மனித உரிமைகள் பிரிவின் உதவியுடன் ஒழுங்கு செய்துள்ளது.

ஆறு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் ஐ.நாமன்ற மனித உரிமைகள் பிரிவின் துணை தலைமைச்செயலாளர் (4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்திற்கு கூடுதல் மாணவருக்கு அனுமதி

(கொழும்பு)

கடந்த காலங்களை விட இந்த வருடம் கூடுதலான மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காகப் பல்கலைக்கழக அனுமதியில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையில் அங்கீகாரம் கொண்டு வரப்படும் என்றும் உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## "நிர்வாகத்தை செயலிழக்கச் செய்யும் முயற்சிகளை முறியடிப்போம்"

### விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள்

சிங்களப் பேரினவாத அரசும், அதன் படைகளும் ஏற்கனவே செயலின்றி இருக்கும் நிர்வாக அமைப்புக்களை வான் தாக்குதல், ஊரடங்கு உத்தரவு போன்ற நடவடிக்கைகளால் முற்றாகச் செயலிழக்கச் செய்ய முயன்று வருகிறார்கள்.

ஆகையினால் இந்த முயற்சிகளை முறியடித்து தமிழீழத்திலுள்ள நிர்வாக அமைப்புக்களை இயங்கச் செய்வது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும். இதுவே எமது போராட்டம் வெற்றிபெறுவதற்கு நாம் செய்யும் உதவியாகவும் அமையும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையொன்றின் மூலம் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 8 மைலினுள் 9 முகாம்கள் கேடயங்களாக மக்கள்

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூருக்கும், தோப்பூருக்கும் இடையேயான எட்டுமைல் தூரத்திற்குள் ஒன்பது இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 'மீளக்குடியமர்தல்' என்ற போர்வையில்கிழ்பச்சை நூர் தேவாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் பலவந்தமாக அழைத்துச் சென்றுஇந்த முகாமைச் சுற்றிக் குடியமர்த்தப் படுகின்றனர். அதாவது குடிமக்களைத் தமது பாதுகாப்புக் கேடயங்களாக்கும் பணியில் சிறிலங்கா இராணுவம் முனைப்பாகச் செயற்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்றோர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் வேலையற்றோர்தொகை அதிகரித்துள்ளதென கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் அறிக்கை ஒன்றின் கணிப்பு தெரிவிக்கிறது.

இந்த வருடம் வேலையற்றோரின் தொகை 13 லட்சமாக இருக்கிறது. எனவும், வடக்குக் கிழக்கு நிலைமைகள் தொடருமேயானால் அடுத்த வருடம் 16 லட்சமாக அதிகரித்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## ஒருவர் காலை இழந்தார் ஒருவர் கண்பகுதியில் காயம்

(யாழ்ப்பாணம்)

என்றுமில்லாதவாறு கோட்டைமுனியப்பர் கோயிலடியில் சுதந்திரமாக உலா வந்த இரண்டு இளைஞர்கள் மிதிவெடியில் சிக்கினர். ஒருவர் காலை இழந்தார் மற்றவர் இடது கண்ணில் காயமடைந்தார்.

நேற்றுமாலை ஐந்துமுப்பது மணியளவில் இந்த இரண்டு இளைஞர்களும் மற்றும் பலரும் முனியப்பர் கோவிலுக்கு அண்மையில் மிதி வெடிஅபாயம் என எச்சரித்திருந்த பகுதியில் பொழுது போக்குவதற்காக உலாவந்தனர். அச்சமயம் கோட்டை முகாம் தாக்குதல்களின்போது புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடியில் வலதுகாலை வைத்த எஸ்.ரவி (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வுகால மரண சகாயநிதி கொடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறு மாதங்களாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் தொழில் புரிந்து ஓய்வுபெற்ற அல்லது இறந்த ஊழியர்களிற்கு சிமெந்து தொழிற்சாலையின் தொழிலாளரினால் இயக்கப்பட்டுவரும் ஓய்வுகால மரண சகாய நிதிச் சங்கம் கொடுப்பனவுகள் செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

ஓய்வுபெற்றவர்களோ, அல்லது இறந்த ஊழியர்களின் நிதியைப் பெற உரித்துடையவர்களோ இந்த பணத்தைப் பெற வசதியாக எதிர்வரும் புதன்கிழமை இச் சங்கத்தின் தலைவர் செ. நாகராசாவின் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும். றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1653)

### விற்பனைக்கு

முதிரையிலான கதிரை. மேசை (ரீயூசன் சென்ரருக்கு தேவையான) விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். கிறாசன் கூல்பார் பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (R. 914)

### போட்டோஸ்ரட்
'ஸ்கைலைன்ஸ்'

தரமான போட்டோஸ்ரட் றோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள் 281 B, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 'SKYILINES' 281,B,Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

### அன்ரன் ஆர்ட்ஸ்
### ANTAN ARTS

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பர பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (/1684)

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாருக்கும்மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம் (50 வருடகால நம்பிக்கைச் சின்னம்ரதிவோச் வேக்ஸ்)-நிர்வாகம். (B.1648)

### தவறிவிட்டது

இல. 203, 3-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறியா ஜூடித் சுதேஷனா அந்தோனிப் பிள்ளையின் அடையாள அட்டை இல. 697710477V கொய்யாத்தோட்டத்துக்கும்அடைக்கலமாதா கோயிலுக்குமிடையில் 8-12-90 அன்று தவறிவிட்டது. இராணுவமுள்ள இடத்தில் கடமையாற்றுவதால்தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். R. 915

# அறிவித்தல்

விரிவுரைகள் யாவும் வழமைபோல் நடைபெறுகின்றன. இதுவரை சமுகமளிக்காத மாணவர்கள் விரிவுரைகளில் கலந்துபரீட்சைக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ளவும்.

உதவிப்பதிவாளர்:
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
**148/1, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்**

(B-1678)

## ராஜா காமென்ற்ஸ்

ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கை திறன் கூடிய தரமான றெடிமேற் ஆடைத் தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

ஆடவர் நங்கையர் மழலைகள்
அனைவரின் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு)

விபரங்கட்கு:
யோகாஸ் புடைவை மாளிகை
இல. 16, பெரியகடை

குமார் புடைவை மாளிகை
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

(B-1655)

# தாதியர் பயிற்சிப்பாடசாலை திருத்தம் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

குண்டு வீச்சு விமானங்களின் அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களால் சேதமுற்றிருந்த தாதியார் பயிற்சிப் பாடசாலை தற்போது பல ஆயிரக்கணக்கான ரூபா செலவிடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மிக விரைவில் அந்தபாடசாலை விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் அங்கு பயின்று வந்த தாதி மாணவர்கள் மற்றும் குடும்ப நல சேவையாளர்கள் ஆகியோர் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு சமுகம் தரும்படி யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## ஷெல் தாக்கு

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினரால் தினமும் புங்குடுதீவுப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும், புங்குடுதீவைச் சுற்றியுள்ள கடற் பகுதியில் தரித்து நிற்கும் கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (22)

## போராளி நினைவாக நூல் நிலையம்

(அச்சுவேலி)

வீர மரணமடைந்த வீர வேங்கை லெப்டினன்ட் றஜீவனின் நினைவாக அச்சுவேலி வடக்கில் புதிய நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லெப். றஜீவன் (தங்கராசா சுதாகரன்) நினைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய நூல் நிலையம் அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## காப்புறுதி வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இம்மாதம் 12 ஆம்திகதிமுதல் ஆயுட் காப்புறுதிக்குரிய வேலைகளை ஆரம்பிக்கஉள்ளது அலுவலக நாட்களில் காலை 9.00மணி முதல் 10.00 மணிவரை மட்டுப்படுத்தப்பட்ட சேவையே ஆரம்பிக்க உள்ளதாகவும் எனவே வாடிக்கையாளர்கள் பணமாக அல்லது இலங்கை வங்கிக்குரிய காசோலையாக தமது கொடுப்பனவுகளை செலுத்தமுடியும் என்றும் இக் கூட்டுத்தாபன உதவிப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (க)

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு
O/L
# யுனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு : 08 – 03 – 1923



இறப்பு : 08 – 12 – 1990

### திருமதி மயில்வாகனம நாகரெத்தினம்

திருமதி மயில்வாகனம் நாகரெத்தினம் 8-12-90 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் மகேந்திரராஜா, (பொலிஸ்-திணைக்களம்) தனபாலசிங்கம் (அவுஸ்திரேலியா), திலகவதி, சிவசுப்பிரமணியம், சுந்தரலிங்கம் (கிராம சேவகர் ஈச்சமோட்டை), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி, வீரமரணமடைந்த முன்னாள் அம்பாறை, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் டயஸ் கந்தசாமி (தவராஜா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ராஜேஸ்வரி, ராஜேஸ்வரராணி (அவுஸ்திரேலியா), செல்வலிங்கம் (ஓமான்), கமலா, லலிதா, யாமினி (அவுஸ்திரேலியா), ரங்கநாதன், புனிதவதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31/1, ஈச்சமோட்டை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று திங்கட்கிழமை (10-12-1990) காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

31/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (B-1690)

தகவல்:
பிள்ளைகள்.

# Diploma In Nursing

**புதிய பிரிவுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன**

- துரித பயிற்சி நெறி
- செய்முறைப் பயிற்சியுடன் கூடியது
- பிரபல விரிவுரையாளர் குழு

விபரங்கட்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE, HOSPITAL ROAD, JAFFNA.

(B. 1693)

# RADIO, TV & DECK

**வகுப்புக்கள் ஆரம்பம்: 12th Dec. 1990**

- பிரபல ஆசிரியர்
- இலகு விளக்கங்கள்
- துரித பயிற்சிநெறி
- விரிவான செய்முறைப் பயிற்சியுடன் கூடியது.

விபரங்களுக்கு:
## North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
HOSPITAL ROAD, JAFFNA.

(B/1692)

### சிந்தனைக்கு

உன் எதிரிக்காக, நீ மூட்டும் நெருப்பு, பல வேளைகளில், அவனைச் சுடுவதைக் காட்டிலும், உன்னையே அதிகம் சுடும்.

— சீனப்பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 65


## எதிரிக்கு நண்பராகிய எம்மினத்தின் எதிரிகள்!

ரெலோக் குழுவினரும் சிறிலங்கா இராணுவத்தினரும் சேர்ந்து நீலாவணையில் எழுபத்தியாறு தமிழர்களை சித்திரவதை செய்துவிட்டு ரயர் போட்டு எரித்துக் கொன்றுள்ளனர். 'ஐயோ' 'அம்மா' என்று அவர்கள் எழுப்பிய அவலக் குரல்களை ரெலோவினர் கேட்டு இரசித்துள்ளனர்.

இதேபோன்று ஆரையம்பதியில் ஒரு பொதுமகனை ரெலோ குழுவினர் சுட்டுக் கொன்றனர். அமிர்தகழியைச் சேர்ந்த பதினெட்டு வயது இளம் பெண்ணை மானபங்கப்படுத்தியதோடு கொலையும் செய்துள்ளனர்.

இவ்வாறு வடக்கில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் ஈ.பி.டி.பியினரும், புளொட்டினரும் தமிழர் படுகொலைகளையும் தமிழ்ப் பெண்களின் மானத்தையும் பறித்து வருகின்றனர்.

இவை யாவும் சிறிலங்கா சிங்கள படையினருக்குத் தமது விசுவாசத்தை வெளியிடும் பொருட்டு மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். ஆனால் இவர்களால் சாதிக்கப்படப் போவது எதுவுமில்லை. அதேவேளை இவர்களின் வாழ்க்கைக் காலம் தீர்மானிக்கப்படலாம். இது தொடர்பாக அமைச்சர் ரஞ்சன் சொன்னதை நேற்றைய இதே பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். அத்தோடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமது விசுவாசத்தை காட்டுவதன் மூலம் எதனையும் சாதித்துவிட முடியாது என்பதை தொண்டமான், குமாரசூரியர், தேவநாயகம் போன்றவர்களின் வரலாறுகளில் இருந்தாவது புரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் ஆங்கிலேயர் வெளியேறியதில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் தமிழரைக் கிழக்கில் இருந்து விரட்டுவதற்கு பல வழிமுறைகளையும், இன வேறுபாட்டையும் பயன்படுத்தி வந்தது. ஆரம்பத்தில் சிங்களவரைப் பயன்படுத்தி வந்த சிறிலங்கா அரசாங்கம் பின்னர் முஸ்லிம்களைப் பயன்படுத்தி வந்தது. முஸ்லிம்களைப் பயன்படுத்துவது இம்முறை யுத்தத்தின்போது மிகவும் உயர்வாக இருந்தது. கடந்த ஆறு மாதத்தில் கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட 4000 க்கு மேற்பட்ட மக்களில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் முஸ்லிம்களாலேயே படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆனால், அண்மையில் முஸ்லிம்களால் தமிழர்கள் படுகொலைசெய்யப்படுவதில்சற்றுக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதற்கு அவர்களின் நோக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இருக்கலாம். ஆனால் படுகொலைகளால் ஏற்பட்ட பக்க விளைவுகள் ஓரளவு அவர்களைக் கட்டுப் படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில், தமிழரைத் தமிழரைக் கொண்டே படுகொலை செய்விக்கும் அடுத்த கட்ட நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கம் தொடக்கியுள்ளது. இந்தநடவடிக்கையின் வெளிப்பாடே நீலாவணை ஆரையம்பதிச் சம்பவங்கள் ஆகும்.

தமிழரைக் கொண்டு தமிழரைப் படுகொலை செய்வது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் வெற்றியாகும். ஏனெனில் தமிழர் படுகொலைக்கான பொறுப்பைத் தான் ஏற்க வேண்டியதில்லை. அதே வேளை இன அழிப்பு நடைபெறுகின்றது. மறுபுறமாக தமிழர் தமது தாயகத்தில் இருந்து தமிழரால் விரட்டப் படுவது. இதனால் ஆக்கிரமிப்பு இலகுவாகின்றது.

தமிழரைப் படுகொலை செய்யும் இத் 'தமிழ்'க் குழுக்களுக்கு இது ஒரு புதுவிடயமல்ல. இந்திய இராணுவத்தினருடனும் சேர்ந்து இதையே இவர்கள் மேற்கொண்டார்கள். இந்திய இராணுவத்திற்கோ, சிறிலங்கா இராணுவத்திற்கோ தமது கைக்கெட்டிய தமிழரைப் படுகொலை செய்வதற்கு அவர்களால் முடியாத காரியமாக இருக்கவில்லை ஆனால் அவர்கள் இப்படு கொலைகளை இவர்கள் மூலமாகவே செய்ய வேண்டும் என எதிர்பார்த்தார்கள். அவ்வாறே செய்தார்கள். அதன் பலனையும் அவர்கள் பெற்றார்கள்.

இந்தப் படுகொலைகளைச் செய்த இவர்களும் அதன் பலனைப் பெற்றார்கள். எந்த மக்களுக்காகப் போராடுகிறோம் என்றார்களோ அதே மக்களால் சொந்த மண்ணை விட்டுத் துரத்தப்பட்டார்கள். இன்று துரத்தப் பட்டதற்காக தமிழ் மக்களின் பரம எதிரிகளுடன் சேர்ந்து மக்களை வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளார்கள். இன்று சிறிலங்கா அரசாங்கத்திற்கும், இராணுவத்தினருக்கும் எவ்வாறு சகல தமிழ் மக்களும் வயது, பால் வேறுபாடு இன்றி எதிரிகளாகத் தென்படுகின்றனரோ அதேபோன்று இவர்களுக்கும் சகல தமிழ் மக்களும் எதிரிகளாகவே தென்படுகின்றனர்.

ஆகையினால், சிறிலங்கா அரச பயங்கரவாதிகளை எவ்வாறு தமிழ்மக்கள் எதிரிகளாக நோக்குகின்றார்களோ இவர்களையும் அவ்வாறே நோக்குவதில் தப்பேதும் இல்லை.

# உதிக்கும் திசை நோக்கி

அடுத்த முகாமிலிருந்த போது எமக்கு பல தகவல்கள் கிடைத்தன. கட்டைபறிச்சானில் புதிதாக அமைக்கப் பட்ட கட்டைபறிச்சான் இராணுவமுகாமிலிருந்து 15-10-90 அன்று வெளியே வந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 4 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். ஜீப்பும் எரிந்தது. பல ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

அதேதினம் புதிதாக அமைக் கப்பட்ட கற்குழி முகாமை நோக்கி சூரங்கல் முகாமிலிருந்து சென்ற இராணுவத்தினர் மீது கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது என்றும் இத்தாக்குதலில் 7 இராணுவத்தினர்கொல்லப்பட்டனர் என்றும் ஒரு எவ், என். சி. உட்பட பலஆயுதங்களும் ரவைகளும் கைப் பற்றப்பட்டன என்றும் அறிந் தோம். கட்டைபறிச்சான் தாக்குதலுக்கு தலைமைதாங்கிய ராஜன் என்பவரைச் சந்தித்து அத்தாக்குதல் எப்படி நடைபெற்றது என்பதை அறிந்தோம். கற்குழியில் கைப் பற்றப்பட்ட எவ். என் .சி யையும் பார்த்தோம்.

எனவும் தெரிவித்தனர்: அக்டோபர் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேற்குக் கொலனியைச் சேர்ந்த புஷ்பராசாவின் மகனைப்பற்றிய விபரமுமில்லை என்றனர். அக்டோபர் 9ஆம் திகதி பிற்பகல் 1-30 மணிய

# உன்னத பயணம்....

ளவில் தம்பலகாமம் முகாமை அண்டியபகுதியில் உள்ள வயல் வெளியில் வைத்து வர்ணமேட்டைச் சேர்ந்த 22 வயதான வி. வசந்தகுமார், 22 வயதான மு. நிமலேந்திரன், முள்ளியடியைச் சேர்ந்த 20 வயதான சு. நாகேந்திரன், 24 வயதான நாயன்மார் திடலைச் சேர்ந்த சி. குட்டி, 21 வயதான நாயன்மார்திடலைச் சேர்ந்த இ. திருநாவுக்கரசு ஆகியோர் கைது செய்யப்பட்டதாகவும் இதில் திருநாவுக்கரசு மட்டுமே உயிரோடு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது என்றும் குறிப் பிட்டனர்.

கற்குழிச் சம்பவத்தின் பின்னர் கள்ளிமேடு, சிப்பித்திடல், கரைச்சித்திடல், கூட்டாம் புளி, பட்டிமேடு போன்ற கிராமங்கள் தமிழர் செல்வ

பெண்களின் பங்கு பற்றியும் கேள்வி கேட்டிருந்தேன். ஏனெனில் திருமலை மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மகளிர் படைப்பிரிவை நான் காணவில்லை.

திரு. ரூபன் அவர்களின் பேட்டி முடிந்ததும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பைப் பற்றி உரையாடினோம் அப்போது திரு. மாத்தயா சில கருத்துக்களைக் கூறினார்.

எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் பெண்களின் பங்களிப்பு மகத்தானதாக இருப்பதைக் காணலாம். ஏனெனில் ஒடுக்கு முறையாளர்களுக்கு முதலில் முகம் கொடுப்பது பெண்களே. எனவே அவர்களுக்குத்தான்

36

புரட்சிக்கான நிர்ப்பந்தங்கள் உண்டு. அத்துடன் விடுதலைப் போராட்டங்களில் ஆண்களின் இழப்பு அதிகரிக்கும் போதும், உழைப்பாளர் தொகை குறையும் போதும் பெண்களின் பங்களிப்பு இயல்பாகவே அதிகரிக்கின்றதை பல வரலாற்று நிகழ்ச்சிகள் சுட்

ஒடுக்கு முறையாளர்களுக்கு முதலில் முகம் கொடுப்பது பெண்களே. எனவே அவர்களுக்குத்தான் புரட்சிக்கான நிர்ப்பந்தங்கள் உண்டு. இதைவிட போராட்டங்களில் ஆண்களின் இழப்பும், உழைப்பாளர் தொகை குறைவதும் இயல்பாக போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கின்றது.

திரு. மாத்தயா



கற்குழியில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து தம்பலகாமம் கோவிலடி அகதி முகாமுக்குள் இராணுவம் புகுந்து கள்ளிமேட்டைச் சேர்ந்த 55 வயதான மா. துரைநாயகம், முள்ளியடியைச் சேர்ந்த 35 வயதான அ. நாகராசா, மேற்குக் கொலனியைச் சேர்ந்த 38 வயதான அமிர்தலிங்கம்கூட்டாம் புளியைச் சேர்ந்த சா. சந்திரசேகரம் 15 வயதான இவரது மகன் ச. ஜீவராசா ஆகியோரைக் கைது செய்து கொண்டு போனதாகவும் அறிந்தோம். கைதுசெய்யப்பட்ட சந்திரசேகரத்தின் வீட்டிற்குச் சென்றமுஸ்லிம் ஊர்காவல்படையினர் தந்தையையும் மகனையும் விடுவிக்க 2 லட்சம் ரூபா கோரியதாகவும் பணமாக தன்னிடம் இல்லை என்று அவரது மனைவி கூறியபோது அவரது கழுத்தை நெரித்ததாகவும் அறிந்தோம்.

சடையன் என்பவரை இராணுவம் பலமாகத் தாக்கியதால் அவர் தம்பலகாமம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார் என்றும் ஆஸ்பத்திரிக்குச் சென்ற முஸ்லிம் ஊர் காவல்படையினர் வெளியே வா கவனித்துக் கொள்கிறோம் என்று சொன்னதால் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி காட்டுப் பகுதியில் அலைவதாகவும் சொன்னார்கள்.

கண்ணிவெடிச் சம்பவத்திற்கு முதல்நாளும் (14.10 90) தம்பலகாமம் முகாமிலிருந்து திருக்கோணமலைக்குச் செல்லும் போது சிலர் கைது செய்யப்பட்டனர் என்று சொன்னார்கள். மேற்கு கொலனி இராம சேவையாளரான 32 வயதான க. மாணிக்கராசா, நடுபிரப்பந்திடல் வாசியான 30 வயதான க. சிவபாதசுந்தரம், 35 வயதான இ. வைரமுத்து, பஸ்ஸில் இருந்த ஒரு மட்டக்களப்புவாசி, ஒரு கந்தளாய்வாசி ஆகிய ஐவர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் உயிருடன் இல்லை

தற்குத் தடைவிதிக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி கிடைத்தது. இந்தச் சம்பவத்தின் பின் ஒரு நாள் இரவு மாடுகள் சென்று கொண்டிருந்த போது அவை, பயந்திருந்த இராணுவத்தினரின் கண்ணுக்கு புலிகள் போலத் தோற்றமளித்ததால் இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டனர். இதில் ஏழு மாடுகள் இறந்தன.

இந்த விபரங்களை நாம் தெரிந்து கொண்ட பின்னர் பிரதான முகாமுக்கு போகலாம் என்ற தகவல் கிடைத்தது. எனவே மீண்டும் நடக்கத்தொடங்கினோம். இதற்குள் ஒரு போராளி கண்ணில் கோளாறு இருப்பதாகத்தெரிவித்தார். எனவே முன்னே செல்லும் ஒருவரில் ஒரு கயிறைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டு பிரயாணத்தைத் தொடரச் சொன்னார் மாத்தயா. அப்படியே அவர்கள் சென்றார்கள். பாரமான பொதிகளுடன் ஒருவர் போக பின்னால் இவர் பிடித்துக் கொண்டு போவது காவடி ஆட்டத்தை நினைவுபடுத்தியது. செடில் பிடிப்பவரைப் போல அந்த நோயாளி வந்து கொண்டிருந்தார். முன்னே செல்பவர் விழுந்தால் இவரும் விழுவார். இப்படியாகப் பிரயாணம் தொடர்ந்தது.

இந்தப் பிரயாணத்தில் நாம் முன்பு போன போது இருந்த பல முகாம்கள் இடம் மாறியிருந்தன. அடிக்கடி முகாம்களை மாற்றுவது என்பது இலேசான காரியமல்ல. ஒருவாறு பிரதான முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அந்த முகாமில் திருமலை அரசியற் பொறுப்பாளர் ரூபன் அவர்களிடம் நிதர்சனத்துக்காகவும் ஈழநாதத்துக்காகவும் ஒரு பேட்டி எடுத்தேன். திருமலையின் இன்றைய நிலைபற்றி வெளியுலகிற்கு கொண்டு வருவதே இதன் நோக்கம். அந்தப் பேட்டியில் திருமலை மாவட்டத்தின் போராட்டத்தில்

டிக் காட்டுகின்றன. நான் அறிந்தவரை சில நாடுகளில் நடந்த போராட்டங்களில் பெண்களே முன்னணியில் நின்று தலைமை தாங்கிப் போராடியிருக்கிறார்கள். ஆனால் வரலாற்றில் இந்த விடயங்கள் அமுக்கப்பட்டு விட்டன. எமது போராட்டத்திலும் பெண்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க நாம் தான் பிந்தி விட்டோமே தவிர அவர்கள் தயாராகத்தான் இருந்தார்கள் என்றார். கருணா, பதுமன், ரூபன், மாத்தயா ஆகியோர் தொடர்ந்து பல விடயங்களை ஆராய்ந்தார்கள்.

இறுதியாகக் கிழக்கு மாகாணம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. சில அரசியல் ரீதியான பிரச்சினைகளை தலைவருடன் பேசி முடிவெடுப்பதெனத் தீர்மானித்தனர். அதையடுத்து எமது பிரயாணம் தொடர்ந்தது. எமது பிரயாணத்தின் போது வடக்கு நோக்கி வரும் பலரைக் கண்டோம். மிகுந்த வேதனையுடன் தமது தாய் மண்ணைப் பிரிந்து வடக்கே வரும் அவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வியும் எழுந்தது.

முன்னர் சந்தித்த அனுபவங்களுடன் எமது பயணம் தொடர்ந்தது.

திருமலை மாவட்ட எல்லையில் பதுமன் எம்மை வழி அனுப்பி வைத்தார். மட்டக்களப்புத் தளபதி கருணாவுடன் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் காலடி வைத்தோம்.

(நாளை முற்றும்)

### கிளிநொச்சி கிளை யாழ்ப்பாணத்தில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனகிளை அலுவலகம் இடம் மாற்றப்பட்டு யாழ். பிராந்திய அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

# "மண்ணை விட்டகலாத மக்களின் மன உறுதியே புலிகளின் ஜீவசக்தி"

## புலிகளின் குரலுக்கு மகேந்திரராசா விசேட பேட்டி

(நமது நிருபர்)

நாற்பது வருடகால எமது விடுதலைப் போராட்டம் பல பரிணாமங்களைக் கடந்துவிட்டது. இந்தக் காலங்களில் எம் மக்கள் மீது தாங்கமுடியாத மிகக்கொடூரமான அடக்குமுறைகள் பலமுறை கட்டவிழ்த்து விடப்பட்டன. வன்முறைகள் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தை அடக்கிவிடலாமென ஆக்கிரமிப்பாளர்கள் நினைக்கலாம். வேதனைகளும், இழப்புகளும் எமது தேசத்தின் மீதான பற்றுதலைக் குறைத்து விடலாம் என நினைக்கலாம். ஆனால் துன்பமான, சோகமான இந்த நிகழ்வுகள் தான் விடுதலையின் தேவையை உறுதியாக மேலும் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு ''புலிகளின் குரல்'' வானொலிக்கு அளித்த விசேட பேட்டியின்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, நாம் தமிழீழத் தேசத்தின் குழந்தைகள். நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒரே தமிழ்க் குடும்பத்தின் அங்கத்தவர்கள். எங்கள் விடுதலைப் போராட்டம் பல சோகங்களையும், வேதனைகளையும் தமிழ் மக்களின் மனங்களில் விதைத்திருக்கிறது. ஆனால் இன்று தமிழீழத்தின் தென்திசையில் நினைத்துப்பார்க்க முடியாத இழப்புக்களை எமது தமிழ்மக்கள் தினமும் சந்திக்கிறார்கள். சிங்களப் பேரினவாதிகளாலும், முஸ்லிம் காடையர்களினாலும் பல தமிழ்க் கிராமங்கள் அடியோடு அழிக்கப்பட்டுள்ளன. அந்தக்கிராமங்களில் இருந்த ஒரு தமிழ்க் குழந்தையைக்கூட உயிருடன் அவர்கள் விட்டு வைக்கவில்லை. கொடுமையான இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளில் 5000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் காணாமல் போய் விட்டனர். விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்கின்றார்கள்.

தம் வாழ்விடத்தை இழந்து, இன்று வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் வாழும், இந்த மக்கள் தான் போராட்டத்தின் பங்காளிகளாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் மண்ணைவிட்டு ஓடவில்லை. இந்த மண்ணின் ஏதோ ஒரு மூலையில் சாவைச் சந்தித்தபடியே வாழ நினைக்கின்றார்கள். அணி திரண்ட இந்த மக்களின் பங்களிப்பே அங்கு போராடிக்கொண்டிருக்கும் போராளிகளின் ஜீவசக்தி. மரணம் இந்த மனிதனை அழித்தாலும் விழுகின்ற ஒவ்வொரு மனிதனின் இரத்தத்தாலும் விடுதலைப் பயிர் வளரும். ஒருநாள் எங்கள் மண்ணின் மீது நடக்கும் அநியாயங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் எதிரி பதில் சொல்லியே தீரவேண்டும் அன்று இந்த மக்களின் சிவந்த விழிகளுக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். இறுதி வெற்றி எங்களுடையதுதான். அன்று இந்த மக்கள் தாயக பூமியில் வெற்றியடைந்த மனிதர்களாக சுதந்திர மனிதர்களாக வாழுவார்கள். எரிக்கப்பட்ட குடிசைகளும், அழிக்கப்பட்ட கிராமங்களும் மீண்டும் எழும். இவர்கள் இந்த மண்ணில் புது வாழ்வு காண்பார்கள் எமது சுதந்திர நாட்டின் குழந்தைகளைப் பார்த்து உலகம் வியக்கும் தமிழ்த்தாய் மகிழ்வாள் என மேலும் தெரிவித்தார்.

---

ஒருவர்

நாதன் (வயது 22) என்பவரின் கால்சிதறியது. அவரின் அருகே நின்ற ஆர்.ராசரூபன் (வயது26) என்பவர் மிதிவெடி துண்டு ஒன்று கண் அருகே பறந்து அடித்ததால் மேல் இமைப்பகுதியில் பலத்த காயமடைந்தார். இந்த இருவரையும் அந்த இடத்திலிருந்து இரத்தம் ஓட.ஓட சைக்கிள்களில் எடுத்துவரப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலில் காயமடைந்த ரவிநாதனின் கால் கழற்ற வேண்டி ஏற்படும் என போதனா வைத்திசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர். மற்றவரின் கண் மயிரிழையில் தப்பியதாகவும் தெரிவித்தனர்.

---

துவண்டு

றப்பட்டுக் குற்றுயிருடன் எரிக்கப்படுவதைப் பார்க்கிறான். மனரீதியான பாதிப்புடன் வாழ்நாளைக் கடத்துகிறான். பெற்றமகள் இரண்டினத்துக் காடையர்கூட்டத்தால் இழுத்துச்செல்லப்படும்போது அவர்களை எதிர்த்துப் போராடி எதுவுமே செய்ய முடியாத, இயலாத கட்டத்தில் துவண்டு துடிக்கும் பெற்றோரின் மனக்கொதிப்பை வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படும் பெண்கள் தடயமே தெரியாமல் கொல்லப்படுகின்றார்கள். கைது செய்யப்படும் ஆண்கள் திரும்பிவராத இடத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள்.

பெற்ற பிள்ளைகளைக் கண் முன்னே காடையரிடம் பறிகொடுத்துவிட்டுப்பரிதவிக்கும் பெற்றோரும், அன்னை, தந்தையை அரக்கர்களிடம் இழந்துவிட்டு ஆதரவின்றி அழுகின்ற மழலைகளும், அநாதைகளாக்கப்பட்ட தமது பேரக்குழந்தைகளுக்காகத் தள்ளாத வயதிலும் உணவு தேடிக்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் வயோதிபர்களும், இரத்த வெறிபிடித்து அலையும் இராணுவத்தினரும், முஸ்லிம்படையினரும் எந்தநேரமும் தம்மை வந்து இழுத்துச் செல்லலாம் என்பதை எண்ணி நடுங்கி நாட்களைக் கழிக்கும் பெண்களும், அதே படையினர் தம்மைஎப்போது வந்து கைது செய்து கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்வார்கள் என்ற அச்சத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆண்களும் தான் இன்று தென் தமிழீழத்தில் வாழாமல் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்.

'இனிஇழப்பதற்கு எதுவுமே இல்லை' என்ற நிலையில் உயிருடன் இயங்கிக்கொண்டிருக்கும் இவர்கள் யார்? வேற்று நாட்டவர்களல்ல எமது சொந்தச்சகோதரர்கள். இவர்கள் சொந்த மண்ணிலேயே வாழவிடாமல் துரத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அகதிமுகாம் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்போதும் அந்த மனிதமிருகங்கள் வரலாம். தாம் இழுத்துச் செல்லப்படலாம், கொலைப்படலாம் என்பதை எதிர்பார்த்து இதயம் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். பட்சபாதமற்ற முறையில் தாம் சேவைபுரிகின்றோம் என்று பேச்சளவில் கூறிக்கொள்ளும் எந்தச் சமூகசேவை நிறுவனங்களுக்கும் தென்தமிழீழத்தில் எமது மக்கள் படும் துயரம் தெரியவில்லை. போதாதென்று இப்போது இயற்கை வேறு அந்தமக்களை அல்லலுக்குள்ளாக்கியுள்ளது. பெருந்தொகையான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவ வசதியின்மையால் இயற்கை மரணங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் எமது சகோதரர்களுக்கு நாம்தான் உதவ வேண்டும். 'மரணிப்பதிலாவது நிம்மதி கிடைக்கும் என்று வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு உறுதியுடன் சகோதரர்களே உதவிட நாம் இங்கே' என்ற நம்பிக்கையை ஊட்ட நீங்கள் அனைவரும் முன்வருவீர்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் உங்கள் முன் வருகின்றோம்.

அவர்களுக்கு நீங்கள் கொடுக்க நினைக்கின்ற பெருள் ஆடையாக இருக்கலாம், சமைப்பதற்கு உதவும் பாத்திரமாக இருக்கலாம், பணமாக இருக்கலாம். எந்த வடிவத்திலும் அவற்றைத் தந்துதவ முன்வருவீர்கள் என்ற உறுதியுடன் நம்பி உங்களிடம் வருகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கொழும்பு

மறித்துத் சோதனை செய்கின்றனர்.

கொழும்புக்கு வடக்காக 176 கி. மீ தூரத்திலுள்ள வில்பத்து வனவிலங்குகள் சரணாலயம் பகுதியிலும் பாதுகாப்பு உஷார் படுத்தப்பட்டுள்ளது. புத்தளம், சிலாபம் ஊடாகத் தமிழ்ப் போராளிகள் நுழைந்துவிடுவார்கள் என்பதற்காகத்தான் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள். இந்தப் பகுதியில் உள்ள தமிழ்க் கிராமங்கள் உட்பட 1085 சதுர கி. மீற்றரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை மத்திய மாகாண டி. ஐ ஜியாக இருந்த பி. உடுகம்பொல கண்டியிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டு கொழும்பு பொலிஸ் தலைமைச் செயலகத்தில் இயங்கும் உள்ளகப் புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏலவே இருந்த புலனாய்வுத் துறையின்மீது அரசாங்கம் கொண்டிருந்த சந்தேகம்தான் இந்தப்புதிய அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான காரணம் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றது.

கொழும்பில் ''அரசாங்க விருந்தினர்''ராகத் தங்கியிருக்கும் மாஜி தமிழ்ப் போராளிக் குழுக்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் படியும் புலனாய்வுத் துறைக்குப் பணிப்பிக்கப் பட்டுள்ளது.

வளைகுடா நெருக்கடி, ஈராக் தேயிலைச் சந்தையின் கதவடைப்பு, அந்நியச் செலவாணி வீழ்ச்சி, குவைத்திலிருந்து திரும்பியோர்களுக்கான புனர்வாழ்வுச் செலவுகள், வேலையில்லாத்திண்டாட்டம் போர்ச் செலவுகள், பணவீக்கம் ஆகியன மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள அதிருப்தியைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சிசாதகமாகப்பயன்படுத்தி குழப்பங்களை உண்டு பண்ணலாம் என்ற பயமும் பாதுகாப்பு உஷார் நிலையில்வைக்கப் பட்டுள்ளமைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

---

டில்லியில்

கலந்துகொள்வார்.

மனித உரிமைகள் பற்றி உலகளவில் நடைபெறும் மூன்றாவது மாநாடு இதுவாகும்

---

# ஆந்திரப் பிரதேசத்தில் 98 பேர் இனக்கலவரத்தால் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரங்களில் இதுவரை 98 பேர் இறந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதில் அலிகாவில் 29 பேரும், ஹைதராபாத்தில் 69 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறையின் போது மட்டும் 33 பேர் இறந்துள்ளனர். மோதலைத் தடுக்கப் பொலிஸார் 15 தடவைகள் சுட்டனர் என்றும், அதனாலேயே இந்த இறப்புக்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த உயிரிழப்புக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி மாநில அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் கலவரங்கள் நிகழ்ந்த இடங்களை மாநிலமுதல்வரும், ஆளுநரும் சென்று பார்வையிட்டனர்.

அதேவேளை கலகக்காரர்களைக் கண்டஇடத்தில் சுடும்படி பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி கால்நடைகள் மீது தண்டப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் கட்டாக்காலிகளாக கால்நடைகள் அவிழ்த்து விடப்படுவதால் பயிர் நாசம் ஏற்படுவதை இட்டு, கால்நடை உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டு வருகிறது. அத்துடன் இந்த தண்டப் பணத்தில் ஒரு பகுதி தென்மராட்சி நோயாளர் நலன்புரிசங்கத்திற்கு கிடைக்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் கட்டாக்காலி மாடுகள் தனங்களப்பு பகுதியில் உள்ள வயல் வெளிக்குள் சென்று பயிர் நாசம் விளைவிப்பதால் அப்பகுதியில் வசிக்கும் சிலரால் ஆடு மாடுகள் துரத்தி பிடிக்கப்பட்டு தலா ஒவ்வொரு கால் நடைகளிற்கும் இருநூறு ரூபா வீதம் அறவிட்டுவருகின்றனர். இவ்வாறு அறவிடப்படும் பணம் மாடுபிடிப்பவருக்கான சம்பளமாக வழங்கப்படுவதாக இந்தக் கால்நடை பிடிக்கும் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க பிடிக்கப்பட்ட கால்நடைகளின் சொந்தக்காரர்கள் தமது கால் நடைகளை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு முன் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் உள்ள தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கத்திற்கு குறிப்பிட்ட தொகைப் பணம் பிரத்தியேகமாக செலுத்தவேண்டும் எனவும் அந்த உறுப்பினர் பணித்து வருகிறார். (லோ)

# பகிரங்க ஏலத்தில் உயர் இன மாடு

நாயன்மார்கட்டு பகுதியில் உள்ள பாரதி விவசாயக்குழுவினர் அப்பகுதி நெல்வயல்களை சேதமாக்கிய உயர் இன மாடு ஒன்றைப் பிடித்துவைத்துள்ளனர்.

ஆனால் பல நாட்களாகியும் இந்த மாட்டுக்கு எவரும் உரிமை கோராததால் அது விரைவில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அக் குழுவினர் தெரிவித்தனர். (லோ)

# 1, 80, 000 ஆசிரியர் சேவையில்

இலங்கை முழுவதிலும் 1,80,000 ஆசிரியர்கள் அரசாங்க சேவையில் உள்ளனர் என்றும் இதில் 75,000 ஆசிரியர்கள் பயிற்சி நெறியினைபெறாதவர்களாகவுள்ளனர் என்றும் உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பயிற்சி இல்லாதவர்களுக்கு 1994ஆம் ஆண்டிக்கு முன்னர் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும், 50 வயதிற்குக்கீழ்ப்பட்டவர்களுக்கே பயிற்சி வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

---

8 மைலினுள்

செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை தமிழர்களுக்கு சொந்தமான கடைகள், வீடுகள், கோயில்கள் என்பன முஸ்லிம் ஊர்காவற் படையினராலும், இராணுவத்தாலும் தொடர்ந்தும் நாசமாக்கப் பட்டுவருகின்றது.

---

ஒய்வுகால

தெல்லிப்பளை இல்லத்தில் வைத்து வழங்கப்பட உள்ளது என சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

---

வட பகுதி வான்

அதிகாரி அரசாங்கத்திற்கு வழங்கிய தகவலைத் தொடர்ந்து, சென்னை - கொழும்பு விமானச் சேவை உட்பட யாழ். குடாநாட்டு வான்வெளி அனைத்து நாட்டு விமானச் சேவைகளுக்கும் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள ஒழுங்குகளின்படி சென்னை-கொழும்பு வான்வெளிப் பாதையைப் பாவிக்கும் விமானச் சேவைகள் யாழ்ப்பாணத்துக்கு மேற்குப் பக்கமாகப் பறக்கும்படி பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது. இப் புதிய பாதை புத்தளத்துக்கு அருகாமையில் உள்ள தீவுப் பக்கமாக கட்டுநாயக்கா சென்றடையும்.

கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவலின்படி இனந்தெரியாத விமானங்கள் மேற்குத் திசையிலிருந்து இலங்கையின் விண்வெளிப் பிராந்தியத்துக்குள் அத்துமீறிப்பிரவேசிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் நீர்கொழும்புக்கும். களுத்துறைக்குமிடையில் மிக உயரத்தில் பறந்துவந்த திசையில் திரும்பவும் பறந்து செல்வது ராடர் திரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்த விமானங்கள் வெளிநாட்டைச்சேர்ந்த வேவு விமானங்கள் என்று கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

---

நிர்வாகத்தை

ஊரடங்குஉத்தரவு அமுலில் உள்ள வேளைகளில் கூட சந்தைகள், கூட்டுறவுக் கடைகள் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு மக்கள் தங்கள் அன்றாட வேலைகளைச் செய்ய பழக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் கடமைக்குச் செல்லத் தயங்குவதை நியாயப்படுத்த முடியாது.

பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு வேலைக்குப்போகாத ஊழியர்கள் எந்நேரமும் தங்கள் வீட்டிற்குள் அல்லதுபதுங்கு குழிக்குள் இருப்பதில்லை. வெளியில் சென்று தங்கள் அன்றாட வேலைகளைக் கவனித்து வருகிறார்கள். வான் தாக்குதல் நடைபெறும் வேளைகளில்மட்டுமே பதுங்கு குழிக்குள் செல்கிறார்கள். ஆதலால் அலுவலகங்களில் பதுங்குகுழி அமைத்துக்கொண்டால் பணிமனைகளின் பாதுகாப்பை உறுதி செய்யமுடியும்.

எனவே எமது தாயகத்தில் வாழும் மக்களின் அத்தியாவசிய சேவைகளை வழங்கிஅவர்களின் இன்னல்களைக் குறைத்து, விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க அனைத்து அரச, கூட்டுத்தாபன ஊழியர்களும் தத்தமது அலுவலகங்களுக்குச் சென்று கடமையாற்றி உதவவேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;